ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2157/44 - 2020 ජනවාරි මස 09 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.01.09

*2157/44 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 09 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

*ச. அ. இல. : பீஎஸ்/சீஎஸ்ஏ/00/1/14/9*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதியுத்தமராம் சனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களினால்**

(முத்திரை)

கோட்டாபய ராஜபக்ஷ

1. கௌரவ உப்பாலி அபேரத்ன அவர்கள்
   ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர்

2. கௌரவ தயா சந்திரசிறி ஜயதிலக்க அவர்கள்
   ஓய்வுபெற்ற மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்

3. சந்திரா பெர்னாண்டோ அவர்கள்
   ஓய்வுபெற்ற பொலிஸ் மா அதிபர்

ஆகியோருக்கு

வாழ்த்துக்கள் !

1A - G 31485 — 387 (2020/01)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

முறையே 2015, சனவரி மற்றும் ஓகத்து மாதங்களில் நடைபெற்ற சனாதிபதித் தேர்தல் அத்துடன்/அல்லது பொதுத் தேர்தல்கள் ஆகியவற்றிற்கு முன்னர் அத்தகைய பதவிகளை வகித்த அரசாங்க உத்தியோகத்தர்கள், அரசாங்கக் கூட்டுத்தாபனங்களின் ஊழியர்கள் மற்றும் ஆயுதப்படை மற்றும் பொலிஸ் சேவை ஆகியவற்றின் உறுப்பினர்கள் அரசாங்கம் மாறியதையடுத்து தமது பதவிகளை இராஜினாமா செய்த அல்லது வேறு வகையில் பதவிகளை வகிக்காதொழிந்த நபர்கள் அல்லது அத்தகைய மாற்றத்தின் பின்னர் தொடர்ந்து அப்பதவிகளை வகிக்கின்ற நபர்கள் என்ற வகையில் 2015, சனவரி 8 ஆந் திகதியிலிருந்து ஆரம்பித்து 2019, நவம்பர் 16 ஆந் திகதி முடிவடையும் காலப்பகுதியில் அரசியல் பழிவாங்கலுக்கு தாம் உட்பட்டிருந்ததாக குற்றச்சாட்டுக்களை விடுத்துள்ளனர் என்று அறிக்கையிடப்பட்டுள்ளதாலும்;

சொல்லப்பட்ட அரசியல் பழிவாங்கலை மேற்கொண்டு செல்வதில் ஆட்டிப்படைக்கப்பட்டதாக கூறப்படும் நிறுவனங்களில் பதவிகளை வகித்துள்ள அல்லது தொடர்ந்து பதவி வகிக்கின்ற அரசாங்க அதிகாரிகள் அடங்கலாக பல நபர்கள் அத்தகைய அரசியல் பழிவாங்கல் நடைமுறையானது, சொல்லப்பட்ட அரசியல் பழிவாங்கல் காலப்பகுதியில் பிரதம மந்திரியின் அதிகார வரம்பின் கீழ் செயல்பட்டு, ஊழல் எதிர்ப்பை கையாண்ட ஒரு விசேட அலகின் மூலம் தூண்டப்பட்டதாக அறிக்கையிடப் பட்டுள்ளதாலும்;

சொல்லப்பட்ட ஊழல் எதிர்ப்பு அலகு யார் விசாரணை செய்யப்பட வேண்டும் என்பதை முதலில் தீர்மானித்து அதன் பின்னர் முறைப்பாடுகளை இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழு (CIABOC), இலங்கை பொலிசின் நிதி விசாரணைப் பிரிவு (FCID) அத்துடன்/அல்லது இலங்கை பொலிசின் பொலிஸ் விசேட விசாரணைகள் பிரிவு (SIU) ஆகியவற்றிற்கு மேற்குறிப்பிடப்பட்ட காலப்பகுதியில் அனுப்பி வைத்ததாக அறிக்கையிடப்பட்டுள்ளதாலும்;

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழு (CIABOC) , இலங்கை பொலிசின் நிதி விசாரணைப் பிரிவு (FCID) அத்துடன்/அல்லது இலங்கை பொலிசின் பொலிஸ் விசேட விசாரணைகள் பிரிவு (SIU) ஆகியவற்றின் முன் பொதுமக்களால் செய்யப்பட்ட பல முறைப்பாடுகள் கவனிக்கப்படாது விடப்பட்டன என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளதாலும்;

சொல்லப்பட்ட அரசியல் பழிவாங்கல் நடைமுறையானது, அரசாங்க உத்தியோகத்தர்கள், அரசாங்கக் கூட்டுத்தாபனங்களின் ஊழியர்கள் மற்றும் ஆயுதப்படை மற்றும் பொலிஸ் சேவை ஆகியவற்றின் உறுப்பினர்கள் ஆகியோர் மீது கணிசமானளவு பாதகமான தாக்கமொன்றை ஏற்படுத்தியுள்ளதோடு, அதன் விளைவாக அத்தகைய உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோர் தமது கடமைகளை நிறைவேற்றுகின்றபோது தீர்மானங்களை மேற்கொள்வதில் விருப்பமின்மையை காட்டியுள்ளனர் மற்றும் காட்டுகின்றனர் என்பதோடு, வேலை தொடர்பாக ஒரு அசமந்தப் போக்கினை பின்பற்ற விரும்பி அதன் மூலம் அரசாங்கத்தின் பணிகள் மீது ஒரு பாதகமான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளனர் என்பது எனது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளதென்பதாலும்;

எனவே, இவ் ஆணையில் இதனகத்துப் பின்னர் குறிப்பிடப்படும் விடயங்கள் அரசாங்க நிறுவனங்களின் நிருவாகம், சட்டம் அத்துடன்/அல்லது நீதி நிருவாகம், அரசாங்க உத்தியோகத்தர்களின் நடத்தை ஆகியன தொடர்புபட்ட விடயங்களாக இருப்பதனால் அவை தொடர்பாகவும், சொல்லப்பட்ட அரசியல் பழிவாங்கல்களில் ஈடுபட்டுள்ள அல்லது அதற்குப் பொறுப்பான எவரேனும் ஆள், ஆட்கள் அல்லது நிறுவனங்கள் எவரேனுமிருப்பின், அவ்வாட்களை அல்லது நிறுவனங்களை இனங்காணல் அடங்கலான விடயங்கள் தொடர்பாகவும் அத்துடன்/அல்லது எனது கருத்தின்படி விசாரணையொன்று நடத்தப்படுவது பொதுமக்களின் நலனுக்குகந்ததாகவிருக்கும் விடயங்கள் தெடர்பாவும் ஒரு விசாரணை நடத்தப்பட்டு அவை தொடர்பான தகவல்கள் திரட்டப்பட வேண்டுமென்பது அவசியமானதென எனக்குத் தோன்றுவதனாலும்;

அத்தகையதொரு விசாரணையிலிருந்து எழுகின்ற ஏதேனும் கண்டறிதல்கள், அறிக்கை அல்லது விதப்புரைகள் தடுப்பு அல்லது நிவாரண நடவடிக்கைகளை எடுப்பதற்கு முக்கியமானதாகவும் அவற்றிற்கு வசதியேற்படுத்துவனவாகவும் இருக்குமாகையினாலும்;

இவ் ஆணைப்பத்திரத்தில் சொல்லப்பட்ட விடயங்கள் மீதான விசாரணையின் பரப்பெல்லையானது, தமது நியதிச்சட்ட ரீதியானதும், சட்டரீதியானதுமான பொறுப்புக்களை ஆற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள்மீது எவ்விதத்திலும் ஒரு தடையினை ஏற்படுத்தாது என்பதை அவதானித்தும், இவ் ஆணைப்பத்திரத்திற்கமைவாக நடத்தப்படும் விசாரணை இருப்பினும், பொருத்தமான எழுதப்பட்ட சட்டங்களுக்கமைவாக இயலுமான நடவடிக்கையை பரிசீலிப்பதற்கும் முடியுமானவிடத்து பின்பற்றுவதற்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது என்பதைக் கருத்திற்கொண்டும்;

எனவே, இவ் ஆணைப்பத்திரத்தின் கீழான விசாரணையானது இலங்கை பொலிஸ், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழு (CIABOC) மற்றும் சட்டமாஅதிபர் உள்ளிட்ட உரிய அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது மேற்கொள்ளப்படக் கூடிய ஏதேனும் நடவடிக்கைகளுக்கு மேலதிகமானதாக அமையுமென்பதோடு, அவற்றிற்கு பங்கம் விளைவிப்பதாக இருக்காது என்பதை அவதானித்தும்;

எனவே, தற்போது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி, கோட்டாபய ராஜபக்ஷ ஆகிய நான் தங்களுடைய விவேகம், ஆற்றல் மற்றும் விசுவாசம் ஆகியவற்றில் பெரும் உறுதியும் நம்பிக்கையும் வைத்து, திருத்தப்பட்டவாறான விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் (அத்தியாயம் 393) பிரிவு 2 இன் ஏற்பாடுகளுக்கமைய இத்தால் சொல்லப்பட்ட தங்களை:

1. கௌரவ உப்பாலி அபேரத்ன அவர்கள்
   ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர்

2. கௌரவ தயா சந்திரசிறி ஜயதிலக்க அவர்கள்
   ஓய்வுபெற்ற மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்

3. சந்திரா பெர்னாண்டோ அவர்கள்
   ஓய்வுபெற்ற பொலிஸ் மா அதிபர்

2015, சனவரி 8 ஆந் திகதி தொடங்கி 2019, நவம்பர் 16 ஆந் திகதி முடிவுறும் காலப்பகுதியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கும், அவை தொடர்பான, குறிப்பாக, பின்வருவன தொடர்பான, அதாவது, தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கும், அதாவது:

(அ) இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழு (CIABOC), இலங்கை பொலிசின் நிதி விசாரணைப் பிரிவு (FCID) அல்லது இலங்கை பொலிசின் பொலிஸ் விசேட விசாரணைகள் பிரிவு (SIU) ஆகியவற்றின் நிருவாகம் தொடர்பில் ஏதேனும் முறைகேடுகள் அல்லது ஒழுங்கீனம் அல்லது பொருத்தமான உரிய விவேகம், வழக்கங்கள், வழிகாட்டு நெறிகள், நடைமுறைகள் மற்றும் மிகச்சிறந்த வழக்கங்கள் ஆகியவற்றிற்கு இயைந்தொழுகாமை ஆகியன இடம் பெற்றுள்ளனவா என்பது;

(ஆ) இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழு (CIABOC), இலங்கை பொலிசின் நிதி விசாரணைப் பிரிவு (FCID) அல்லது இலங்கை பொலிசின் பொலிஸ் விசேட விசாரணைகள் பிரிவு (SIU) ஆகியவற்றினால் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் விசாரணைகள் மீது ஏதேனும் விதத்தில் செல்வாக்கு பிரயோகிக்கப்பட்டிருந்ததா அல்லது அவ்விசாரணைக்கு தடையேற்படுத்தப்பட்டு, எவரேனும் நபருக்கு அல்லது நபர்களுக்கு இழப்பு, சேதம், காயம் அல்லது ஊறு நேரடியாக அல்லது மறைமுகமாக ஏற்படுத்தப்பட்டதா என்பது;

(இ) இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழு (CIABOC), இலங்கை பொலிசின் நிதி விசாரணைப் பிரிவு (FCID) அல்லது இலங்கை பொலிசின் பொலிஸ் விசேட விசாரணைகள் பிரிவு (SIU) ஆகியவற்றினால் நடத்தப்படும் விசாரணைகள் ஒப்படைக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தர் சொல்லப்பட்ட ஊழலுக்கு எதிரான அலகு உள்ளிட்ட மூன்றாந் தரப்பினால் பிரயோகிக்கப்பட்ட பொருத்தமற்ற செல்வாக்கின் கீழ் செயல்பட்டுள்ளாரா என்பது;

(ஈ) சொல்லப்பட்ட ஊழலுக்கெதிரான அலகு, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழு (CIABOC), இலங்கை பொலிசின் நிதி விசாரணைப் பிரிவு (FCID) அல்லது இலங்கை பொலிசின் பொலிஸ் விசேட விசாரணைகள் பிரிவு (SIU) ஆகியவற்றின் பணிகள் தொடர்பில் அல்லது ஏதேனும் சட்ட நிருவாகம் அல்லது நீதி நிருவாகம் தொடர்பில் எவரேனும் நபர் ஏதேனும் அரசியல் பழிவாங்கல், அதிகார துஷ்பிரயோகம் அல்லது தவறான பிரயோகம், ஊழல் அல்லது ஏதேனும் மோசடி நடவடிக்கையை புரிந்துள்ளாரா என்பது;

அத்துடன், இவ் ஆணைப்பத்திரத்தின் நியதிக்களுக்கமைய விசாரணை செய்யப்பட்டுள்ள ஏதேனும் விடயங்கள் தொடர்பில் பரிந்துரைகளை மேற்கொள்வதற்கும் எனது ஆணையாளர்களாக இத்தால் நியமிக்கின்றேன்;

அத்துடன், கௌரவ உப்பாலி அபேரத்ன ஆகிய தங்களை இவ் ஆணைக்குழுவின் தலைவராக நான் இத்தால் நியமிக்கின்றேன்.

அத்தகைய விசாரணை நடத்துவதற்கும், மேற்குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் தேவையானதெனத் தென்படும் அத்தகைய அனைத்து விசாரணைகளையும் மேற்கொள்வதற்கும் தங்களுக்கு இத்தால் நான் அனுமதியளித்து அதிகாரமளிப்பதோடு, இவ் ஆணைப்பத்திரத்தில் விடுக்கப்பட்ட திகதியிலிருந்து ஆறு (06) மாதங்களுக்குள் உங்களுடைய விசாரணைகளின் கண்டறிதல்களையும், உங்களது விதப்புரைகளையும் குறிப்பிட்டு அது தொடர்பான அறிக்கைகளை அல்லது இடைக்கால அறிக்கைகளை உங்களது கையெழுத்தோடு எனக்கு அனுப்பி வைக்குமாறும் வேண்டுகிறேன்.

நீங்கள் உங்கள் தற்றுணிபில் தீர்மானிக்கக் கூடிய மேற்குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பிலான ஏதேனும் விசாரணையின் அத்தகைய பகுதிகளை பகிரங்கமாக நடத்தாமலிருக்கலாம்.

உங்களுடைய விசாரணைகள் மற்றும் புலனாய்வு நோக்கத்திற்காக உதவியை அல்லது தகவல்களை நீங்கள் கோருகின்ற சகல அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய நபர்கள் ஆகியோரை அத்தகைய உதவிகள் அனைத்தையும் வழங்குமாறும், அது தொடர்பான தகவல்களை உரியவாறு வழங்குமாறும் நான் இத்தால் வேண்டுகிறேன்.

மேற்குறிப்பிட்ட விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 14 இன் ஏற்பாடுகள் இவ் ஆணைக்குழுவிற்குப் பொருந்துதல் வேண்டும் என்று நான் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

அதியுத்தமராம் கோட்டாபய ராஜபக்ஷ அவர்களின் கட்டளைக்கமைய இரண்டாயிரத்து இருபதாம் ஆண்டு சனவரி மாதம் 09 ஆந் திகதியான இன்று கொழும்பில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலட்சினையின் கீழ் வழங்கப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

பீ. பி. ஜயசுந்தர,
சனாதிபதியின் செயலாளர்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.